Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 94/2020 PW-4**

Name : ஆதிமூலம்
Father / Husband name : ஜெயராமன்
Village : வெள்ளிமேடுபேட்டை
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.01.2026

Accused 1 to 3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளிமேடுபேட்டை தனிப்பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்துவருகிறேன். திண்டிவனம் காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது 18.05.2017 அன்று முண்டியம்பாக்கம் மருத்துவமனையிலிருந்து கிடைத்த மருத்துவ தகவலை அடுத்து உதவி ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்பேரில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த எழில் த/பெ வடிவேல், என்பவரிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து சிஎஸ்ஆர் 89/2017 என்று பதிவு செய்து மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இதுசம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் பதிவு செய்து அதிலுள்ள மேற்குறிப்பு நான் எழுதி கையொப்பம் செய்தது. **அந்த புகார் வாக்குமூலத்திலுள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் வாங்கவேண்மென்றால் மருத்துவரின் முன்னிலையில் தான் வாங்கவேண்டும் என்றால் சரியல்ல.

புகார்தாரருடன் இருப்பவர்களை சாட்சியாக சேர்க்கலாம் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில் அனைத்து குறிப்புகளும் நான் எழுதியது என்றால் இல்லை, முதல் குறிப்பு நான் எழுதியது. புகார் வாக்குமூலத்தில் இரண்டாவது பக்கத்திலுள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரியல்ல. 1வது எதிரி திண்டிவனம் காவல் நிலையத்தில் பல்வேறு வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் வாங்கிய காலக்கட்டத்தில் 1வது எதிரி தேடும் குற்றவாளியாக இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்திற்கும் புகார் வாக்குமூலம் வாங்கியதற்கும் எத்தனை நாட்கள் வித்தியாசம் என்றால் 3 நாட்கள். உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது எதற்காக காலதாமதம் என்று சொன்னேனா என்றால் இல்லை. அ.சா.1 மற்றும் எதிரிகள் மூன்று பேரும் நண்பர்கள், எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்று அ.சா.1 யிடம் கையொப்பம் பெற்று வழக்கிற்கு ஏற்ப புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1யிடம் எந்த புகார் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 94/2020 PW-5**

Name : அன்வர்
Father / Husband name : சலீம்
Village : திண்டிவனம்
Age : 36
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.01.2026

Accused 1 to 3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் லாரிக்கு கட்டுகட்டும் பணி செய்கிறேன். அ.சா.1 எழில் எனது நண்பர். அ.சா. 2, அ.சா.3 ஆகியோர்களை எனக்கு தெரியாது. கடந்த 2017 ம் ஆண்டு தேதி மாதம் நினைவில்லை ஒருநாள் கிடங்கலில் உள்ள பிள்ளையார் கோவிலில் கேரம்போடு விளையாடியபோது நான் அங்கு நின்று பார்த்திருந்தேன், அப்போது அ.சா.1 ம் 1வது எதிரிக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. அதில் அ.சா.1, 1வது எதிரியை அடிக்க கையை ஓங்கியபோது 1வது எதிரி விலகிக்கொண்டார். அ.சா.1 கல்லின்மீது விழுந்து காயம் ஏற்பட்டது. பின்னர் போலிசார் வந்து விசாரித்து கையொப்பம் கேட்டார்கள் நான் செய்துகொடுத்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 15.05.2017 அன்று மதியம் 1 மணிக்கு நீங்களும் எழில் என்பவரும் திண்டிவனம் கிடங்கல் 1 ஏரிக்கரைக்கு சென்றுவிட்டு துர்கை அம்மன் கோவில் அருகே வரும்போது அங்கு குடித்துக்கொண்டிருந்த எதிரி

மஸ்தான் மற்றும் அவருடன் இருந்த இரண்டு நபர்களும் அ.சா.1யிடம் தீப்பெட்டி கேட்க அவர் இல்லை என்று சொன்னதால் எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டி, 1வது எதிரி கருங்கல்லை எடுத்து அ.சா.1 ன் மூக்கில் குத்தி காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அவருடன் இருந்த இரண்டு நபர்களும் தடியை எடுத்துஅ.சா.1 ன் முதுகிலும், காலிலும் அடித்தார் என்றும், 1வது எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அ.சா1 ன் கழுத்தில் வைத்து கொலை மிரட்டல்விடுத்தார் என்றும், பின்னர் அ.சா.1 நடந்த சம்பவத்தை சுரேஷ்க்கும், ராமதுரைக்கும் தகவல் கொடுத்து அவர்கள் வந்தவுடன் நீங்களும் அவர்களுடன் சேர்த்து அ.சா.1 திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றீர்கள் என்றும்,அ.சா.1 எதிரிகள் மீது கொடுத்த புகாரின்பேரில் போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உங்கள் நண்பர்கள் என்பதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.